IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.
RANIPET DISTRICT.

DEPOSITION OF WITNESS
SC.No. 43/2025 - PW-11

| | |
|---|---|
| Name | திரு. குமரேசன் |
| Husband/Father Name | ஆறுமுகம் |
| Village /Area | வேலூர் |
| Taluk | வேலூர் |
| Occupation | இளநிலை அறிவியல் அலுவலர் |
| Age | 41 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.07.2026.

**(எதிரிகள் ஆஜர்).**

**(சாட்சி காணொளி மூலம் அவர் பணிபுரியும் வட்டார தடய அறிவியல் ஆய்வகம், வேலூரிலிருந்து விசாரிக்கப்பட்டார்) துவங்கிய நேரம்: மாலை 04.15**

**முதல் விசாரணை :**

நான் தற்போது வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இளநிலை அறிவியல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.09.2023 அன்று வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் இளநிலை அறிவியல் அலுவலராக பணியிலிருந்த போது காவலர் 667 திரு.கணேஷ் அவர்களின் மூலம் ஒரு குப்பி சரியான முத்திரையுடன் பெறப்பட்டது. குப்பியில் கையால் இடப்பட்ட PN.No.1144/2023, Date:05.09.2023, Cr.NO.337/2023 அரக்கோணம் கிராமிய காவல் நிலையம் விக்னேஷ், வயது.23 ஆண் ரத்தம் தோய்ந்த துணி என்று பெயரிடப்பட்டிருந்தது. இந்த ரத்த மாதிரி சென்னை தடய அறிவியல் ஆய்வகத்துக்கு குருதி வடிநீரியல் பிரிவிற்கு அனுப்பப்பட்டது. அது குறித்து என்னால் தடய அறிவியல் அறிக்கை VLR/BIOL/280/2023, Date:05.09.2023. அது **அ.த.சா.ஆ.15** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

27.12.2023 காவலர் 667 திரு.கணேஷ் அவர்களின் மூலம் நீதித்துறை நடுவர் அரக்கோணம் அவர்களிடமிருந்து சரியான முத்திரையுடன் ஒரு அட்டை பெட்டி பெறப்பட்டது.

அதில் **அயிட்டம் 1**– ஒரு கிழிந்த நீல நிறமுள்ள முழுக்கை சட்டை, அதில் ரத்த கரை படிந்திருந்தது.

**அயிட்டம் 2**– ஒரு கிழிந்த brown colour ஜட்டி அதில் ரத்தம் படிந்திருந்தது.

**அயிட்டம் 3**– ஒரு கிழிந்த நீல மற்றும் பச்சை லுங்கி அதில் வெள்ளை நிற

குறுக்கு போடப்பட்டிருந்து அதில் ரத்தம் படிந்திருந்தது.
**அயிட்டம் 4–** ஒரு கருப்பு நிற Jeans Trouser அதில் ரத்த கரை படிந்திருந்தது.
**அயிட்டம் 5–** ஒரு சிகப்பு brown white குறுக்கு கோடு உடைய ஒரு துணி அதில் ரத்தம் முழுவதும் படிந்திருந்தது.
**அயிட்டம் 6–** ரத்தம் படிந்த மண் சிறிதளவு
**அயிட்டம் 7–** ஒரு துருப்பிடித்த இரும்பாலான கத்தி அது மரக்கைப்பிடி கொண்டது அதில் இரும்பு வளையம் அதன் நீளம் 43cm அதில் ரத்தம் படிந்திருந்தது.

மேற்படி 1 முதல் 7 மாதிரிகளில் ரத்தம் படிந்திருந்தது என்று ஆய்வு அறிக்கை வழங்கப்பட்டது. அந்த ஆய்வு அறிக்கை VLR/BIOL/408/2023, Date:02.01.2024. அது **அ.த.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

ரத்தம் தோய்ந்த ஜல்லடை துணியை நான் பகுப்பாய்வு செய்யவில்லை சென்னைக்கு அனுப்பிவிட்டேன். ரத்த வகை மற்றும் இனத்தை நான் கண்டறியவில்லை.

1 முதல் 7 மாதிரிகளில் ரத்தம் படிந்திருந்தது என்று மட்டும் தான் நான் அறிக்கை வழங்கினேன். ரத்த வகை மற்றும் இனத்தை நான் பகுப்பாய்வு செய்யவில்லை.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.
**விசாரணை முடிந்த நேரம்**:– மாலை 04.35

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.07.29 18:57:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.